Registere as a News Papare

பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

நல்லூர் ... நூலகம் ... யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 08 (.2 - 06 - 1992) திங்கட்கிழமை ஓசை: 125

## முதலாம் ஆண்டு அனுமதியில் மாற்றம் செய்ய ஆலோசனை

அரசு ... பாடசாலைகளில் முதலாம் ஆண்டிற்கு மாணவர்களை அனுமதிக்கும் முறையில் சில மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்து கல்வி சம்பந்தமான பாராளுமன்ற ஆலோசனைக்குழு ஆலோசித்து வருகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்ற கட்டடத்தில கூடிய மேற்படி குழு பாடசாலை அனுமதியின் போது நிரந்தர வதிவிட மாணவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 35 வீத இடங்களை மேலும் 15 வீதத்தால் அதிகரிக்க உத்தேசித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை நிரந்தர வதிவிடமில்லாதவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஒரு வீத இடத்தை ஆறு வீதமாக அதிகரிக்க (4ஆம் பக்கம் பார்க்க)

# தெரிவுக்குழுவின் யோசனைகள் பேரினவாத கட்சிகளின் சூழ்ச்சி

### தேசவிரோதிகளினால் பொது மகன் சுட்டுக் கொலை

மட்டக்களப்பில் கடந்த வெள்ளிக்கிழமை தேசவிரோதிகளினால் சோமசுந்தரம் என்கின்ற தமிழ் பொதுமகன் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு மண்டூர்ப் பகுதியில் வைத்தே இந்த பொதுமகன் தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டார் சுட்டுக்கொல்லப்பட்ட இந் நபரின் சடலம் பற்றை ஒன்றினுள் அனாதரவாகக் கிடந்து பொதுமக்களினால் கண்டெடுக்கப்பட்டது.

## அருள்-89ஐ பரிசோதித்த இரு இளைஞர் காயம்

முல்லைத்தீவு தண்ணீரூற்று களுக்கேணியில் இரண்டு இளைஞர்கள் வெடிக்காத அருள்-89 ஒன்றை கழற்ற முற்பட்டபோது அது வெடித்த போது காயமடைந்தனர்.

களுக்கேணியைச் சேர்ந்த சிவகுமார் (வயது-16) தண்ணீரூற்றைச் சேர்ந்த ரவி (வயது-14) என்போரே இவ் வெடிவிபத்தில் காயமடைந்தவர்கள் ஆவர்.

## புலிகளின் பலம்பற்றி இந்திய புலனாய்வுத்துறை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஏனைய தீவிர வாத இயக்கங்களுடன் ஒப்பிடும் போது மிகுந்த வேறுபாட்டினையும். பலத்தினையும் கொண்டது என இந்தியப் புலனாய்வுத்துறை தற்பொழுது தெரிவிக்கின்றது.

இந்தியாவின் தீவிரவாத குழுக்கள் எத்தனையோ இருந்தபோதிலும் அவற்றின் செயற்பாடுகளில் இருந்து விடுதலைப் புலிகள் இயக்கமானது பல அம்சங்களில் தனக்கே சிறப்பானது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (,05)

## மட்டக்களப்பு இளைஞரிடம் கொழும்பில் வழிப்பறி

(கொழும்பு)

மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு அலுவலக தொடர்பாக வந்த மட்டக்களப்பைச் சேர்ந்த மூவரிடம் மருதானை தொழி நுட்ப கல்லூரி சந்தியில் வைத்து இனந்தெரியாத இளைஞர்கள் இருபதினாயிரம் பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்

இவர்கள தம்மை சி ஐ டியினர் என்று கூறினர் என்றும் இச் சம்பவம் கடந்த வெள்ளி கிழமை நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தடுத்து வைக்கப்பட்டோருக்கு உதவ

## வடக்கு - கிழக்கை துண்டாடச் சதி

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் சார்பில் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ள யோசனைகள் ஐக்கியதேசியக்கட்சியினதும்,சிறிலங்கா சுதந்திரக்கட்சியினதும் அனுசரணையுடன் முன்வைக்கப்பட்டவை என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. வடக்கு - கிழக்கு பிரச்சினை தீர்விற்கு இதுவரை வெளிப்படையாக தீர்வுத்திட்டம் எதையும் முன்வைக்காத இப் பேரினவாத கட்சிகள், வடக்கு - கிழக்கு இணைப்பிற்கு எதிராக மறைமுகமாக இத் தீர்வுத் திட்டத்தை முன்வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவரான சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு. மங்கள முனசிங்கா உள்ளார். அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியைச் சோந்த உறுப்பினர்கள் பெரும்பான்மையாக உள்ளனர். இந் நிலையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் சார்பில் பரிசீலனைக்கு முன்வைக்கப்பட்ட திட்டமானது சந்தேகத்திற்கு இடமின்றி இவ்விரு கட்சிகளின் மறைமுக ஒத்துழைப்புடனேயே கொண்டு வரப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு இணைப்பை இதுவரை சிங்களப்பேரினவாத கட்சிகள் எவையும் ஆதரிக்கவில்லை. ஆனால் வடக்கு-கிழக்கு இணைப்பை வெளிப்படையாக எதிர்ப்பதன்மூலம் இனப்பிரச்சினை தீர்வுத்திட்டத்தைக் குழப்பியதாகப் பழியை ஏற்பதற்கு இவ்விரு கட்சிகளும் விரும்பவில்லை.

இந்நிலையிலேயே பாராளுமன்றத்தெரிவுக்குழுவின் ஊடாக வடக்கு - கிழக்கு மாகாணங்களை தனித் தனியாகக் கொண்ட தீர்வுத்திட்டம் ஒன்றை இக்கட்சிகள் கூட்டாகமுன்வைத்துள்ளன. அதாவது இரு பேரினவாதக்கட்சிகள் இரண்டும் இணைந்து தெரிவுக்குழு ஊடாகச் சூழ்ச்சி செய்வதில் ஈடுபட்டுள்ளன.

## பிரேமதாசாவின் அறிவிப்பால் தெரிவுக்குழுவிற்கு சங்கடம்

(லண்டன்)

வடக்கு-கிழக்குஇணைப்பை ...

தமிழ்க்குழுக்கள் வடக்கு - கிழக்கு இணைப்பை வற்பு ...

ஜனாதிபதி வடக்கு - கிழக்கு இணைப்பை முற்றாக நிராகரித்துள்ளமையால் எவ்வா ...

## தமிழ்க்குழுத் தலைவரை பிரேமதாசா அவமதித்தார்

இனப்பிரச்சினை தீர்வு குறித்து கலந்துரையாடச் சென்ற தமிழ் குழுக்கள் சிறிலங்கா ஜனாதிபதியால் அவமானப்படுத்தப்பட்டதாக அக்குழுவின் பிரதிநிதி ஒருவர் பி.பி.சி.க்கு தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா ஜனாதிபதி தமிழ் குழுக்களிடம் வடக்கு-கிழக்கு இணைப்புப்பற்றி நினைத்தும் பார்க்கவேண்டாம் என வற்புறுத்தியதாகவும் அப்பிரதிநிதி மேலும் தெரிவித்தார்

இவ்வாறு ஜனாதிபதி வற்புறுத்தியமை தனக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதாகவும் அவர் கூறினார்.

## புலிகளுடன் ஆலோசிக்காத தீர்வினால் பயனில்லை

(லண்டன்)

இனப்பிரச்சினை தீர்வு குறித்து ஆராயவென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவினால் விடுதலைப் புலிகளின் கருத்துக்கள் பெறப்படாது முன்வைக்கப்படும் தீர்வினால் பயன் எதும் இல்லை என ஒரு தமிழ் அரசியல்வாதி பி. பி சிக்கு தெரிவித்தார்

வடக்குக் கிழக்கின் பெரும்பாலான பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நிலையில் அவர்களுடன் கலந்தாலோசிக்காது தீர்வை எட்ட முடியாது என அவர் தெரிவித்தார்.

## ஐ. தே. க. - சு. க. இணைப்பு

## சுதந்திரக் கட்சியில் சிலர் முயற்சி செய்கின்றனராம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியோடு சிறிலங்கா சுதந்திரக்கட்சி இணையவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ...

... வில் பிரேமதாசாவை தோற்கடிக்க முடியாதவிடத்து அடுத்த மூன்று வருட தனது பதவிக்காலத்திலும் செயற்படுவார் என்று சுதந்திரக் ...

தடுத்து வைக்கப்பட்டோருக்கு உதவ

## மனிதஉரிமை செயலணிகுழு நடவடிக்கை

மூன்று வருடங்களுக்கு மேலாகத் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளோர் தாங்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதை எதிர்த்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு மனித உரிமைகள் செயலணிக் குழு உதவி புரியவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்படுவதாகவும் மனித உரிமைகள் செயலணிக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்

தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை விடுவித்து அவர்களுக்கு நல்வாழ்வு வழங்குவதே இதன் நோக்கமென்றும் அவர் தெரிவித்தார்.

## இன்று பண்டாக்கள் தொண்டாக்களுக்கு அடிமை

(கொழும்பு)

இந்த அரசாங்கம் தொண்டமானின் தேவைகளுக்கேற்ப வே செயற்படுகின்றது. தொண்டமான் 56 ஆயிரம் ஹெக்டயர் காணிகளை தோட்ட நிர்வாகங்களை தனியார் வசம் ஒப்படைத்த பின்னர் பகிர்ந்தளிக்கும்படி வற்புறுத்துகின்றார். இது விரைவில் நடைபெறும்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். இன்று பண்டாக்கள் தொண்டாக்களுக்கு அடிமையாகி விட்டார்கள்.

அரசாங்கம் இழக்கும் சிங்கள மக்களின் வாக்குகளை மலையக மக்களிடம் சரி செய்யப்பார்க்கிறது என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

(லண்டன்)

வடக்கு-கிழக்கு இணைப்பை நிராகரித்து ஜனாதிபதி பிரேமதாசா விடுத்திருக்கும் அறிவிப்பு இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தெரிவுக்குழுவின் நடவடிக்கையை நெருக்கடிக்கு உள்ளாக்கி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்க் குழுக்கள் வடக்கு-கிழக்கு இணைப்பை வற்புறுத்தும் அதேவேளை ஜனாதிபதியின் இவ் அறிவிப்பு தெரிவுக்குழுவை ஒரு இக்கட்டான நிலைக்கு கொண்டுவந்துள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைவில் அறிவிக்குமாறு தெரிவித்த சிறிலங்கா ஜனாதிபதி வடக்கு-கிழக்கு இணைப்பை முற்றாக நிராகரித்துள்ளமையால் எவ்வாறான திட்டத்தைக் கொண்டு வருவதென்பதில் முடிவெதையும் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியோடு சிறிலங்கா சுதந்திரக்கட்சி இணையவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஒரு முக்கியபிரிவினர் தமது கட்சிக்குள் ஆதரவு தேடி பிரசாரம் செய்து வருகின்றார்கள் என்று 'லேக்ஹவுஸ்' பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன.

இந்த அங்கத்தவர்கள் பொது வேலைத்திட்டமொன்று வேண்டுமென்று கோரிக்கையை முன்வைத்துள்ளனர் என்றும்.

அடுத்த பொதுத்தேர்தலில் வெற்றியீட்ட முடியாதவிடத்து அடுத்த மூன்று வருட தனது பதவிக்காலத்திலும் செயற்படுவார் என்று சுதந்திரக் கட்சி எம்.பி.க்கள் மத்தியில் பேச்சு அடிபடுகிறது என்றும் அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட கொள்கையை தொடர்ந்தும் முன்நடத்திச் செல்லக் கூடிய தலைவர் ஒருவர் நாட்டுக்குத் தேவை என்று அவர்கள் கூறுகின்றனர் என்றும், அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற தெரிவுக்குழு

## விரைவாக செயற்படுமென தொண்டமான் நம்பிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண என நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு அடுத்தவாரம்முதல் கூடி விவாதித்து பிரச்சினைக்கு தீர்வு காணவிரைவான நடவடிக்கை எடுக்கும் என சிறிலங்கா கிராமிய தொழில்துறை அமைச்சர் எஸ்.தொண்டமான் தெரிவித்துள்ளார்.

சண்டேரைம்ஸ் பத்திரிகைக்கு இவர் அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அரசியல் கட்சிகள் தீவிரம் காட்ட வேண்டுமென்றும் அதற்கென ஒவ்வொரு நிமிடத்தையும் தியாகம் செய்ய வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

கட்சிகளின் நலத்தை விட நாட்டின் நலன்தான் முக்கியம் எனவே சுயநலத்தை விட்டுவிட்டு நாட்டு நன்மையைக் கருதி பிரச்சினையைத் தீர்க்க சகலகட்சிகளும் முன்வரவேண்டும் என தெரிவித்தார்.

இதேவேளை இனப்பிரச்சினை தீர்விற்காக ஏழு தமிழ்க் கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளை ஐக்கிய தேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஏற்றுக் கொண்டால் விடுதலைப் புலிகள் வடக்கு-கிழக்கு பிரச்சினை குறித்த பேச்சுவார்த்தைக்கு வரக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றது என்றும் இ.தொ.கா தலைவர் எஸ் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

''லங்கா தீப'', ''சண்டே

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலை வழக்கு யூலை வரை ஒத்திவைப்பு

(சென்னை)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை வரும் யூலை 1 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை கடந்த புதன கிழமை செங்கல்பட்டு மறியல் சாலையில் நீதிபதி சௌந்தர பாண்டியன் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டுள்ள இருபத்தியாறு பேருக்கும் குற்றப்பத்திரிகை பிரதிகள் மற்றும் சாட்சியங்களின் பெயர்ப் பட்டியல் என்பன வழங்கப்பட்டுள்ளன. குற்றப் பத்திரிகைப் பிரதிகள் ஆங்கிலத்தில் இருப்பதனால் அவற்றைத் தமிழில் மொழி பெயர்த்துத்தருமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

## இந்தியா செல்லும் பாதையில் நாம் செல்ல முடியாது

=காமினி பொன்சேகா

(கொழும்பு)

''இலங்கை குறித்தோ இங்குள்ள தமிழர் குறித்தோ இந்தியாவிற்கு எவ்வித அக்கறையோ பற்றோ இல்லை. நாம் மதிக்கும் நேருகூட இலங்கைக்கு சுதந்திரம் வழங்கபபடுவதை விரும்பவில்லை. இந்தியாவின் ஒரு பகுதியாக இலங்கை இருக்கவேண்டும் என்பதையே விரும்பினார்கள். எனவே இந்தியா செல்லும் பாதையில் நாம் செல்லமுடியாது. அவர்களதுதப்பான அரசியல் நடவடிக்கையையும் மதிக்க முடியாது''

இவ்வாறு பிரதி சபாநாயகர் காமினிபொன்சேகா பாராளுமன்றத்தில் உரையாற்றும போது தெரிவித்தார். அவசரகாலசசட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிப்பது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நாட்டின் இன்றைய இனப் பிரச்சினைக்கு இருபெரும் அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளே காரணமென்றும், இதனை மேலும் தொடரஇடமளிக்கக்கூடாது என்றும் குறிப்பிட்டார்

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா விடுதலைப் புலிகளை தடைசெய்துள்ளார். நம்மும் தடை செய்யவேண்டும் என்று கேட்கின்றார். எம் மீதுள்ள பற்றுக் காரணமாக இவர்கள் அவர்கள்மீது இவ்வாறு தடை செய்தனர் என்றும் காமினி பொன்சேகா தமதுரையில் குறிப்பிட்டார்.

## 74 பேருக்கு துணைவேந்தர் நல நிதியம்

(யாழ்ப்பாணம்)

1990-91 கல்வியாண்டில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களில் 74 பேருக்குமட்டுமே துணைவேந்தர் நல நிதியம் கிடைத்துள்ளது.

இதற்கு 300க்கும்மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்து இருந்தும் சொற்பளவானவருக்கே நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக நலச்சேவைகள் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (5)

## காரைதீவு பிள்ளையார் ஆலயத்தில் புத்தர் சிலை

(காரைதீவு)

காரைதீவு பிரதான சந்தியில் அமைந்துள்ள அரசடி பிள்ளையார் ஆலயத்தில் புத்தரின் சிலையொன்றை சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் நிறுவியுள்ளனர்.

முகாம் அதிகாரியான உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் அஜித்விக்கிரம சேகர இதனைத் திறந்து வைத்ததாகவும் இந்த நிகழ்ச்சிக்கு அம்பாறையில் இருந்து பிக்குகள் வந்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை, மட்டக்களப்பு

## தமிழ் மாணவர்கள் அரசால் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட கல்வி செயற்பாடுகளில் தமிழ் மாணவர்கள் முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முஸ்லிம் மக்களின் பாடசாலைகளை தரமுயர்த்தும் நடவடிக்கைகளில் சிறிலங்கா அரசாங்கம் ஈடு

(4 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியா ஆசிரியர்களுக்கு

# நகர்ப்புற இடமாற்றங்களை உடன் வழங்க உத்தரவு

(வவுனியா)

வவுனியா கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் எவராயினும் நகரப்பகுதி பாடசாலைகளில் கல்வி கற்பிக்க விரும்பினால் அவர்களை உடனடியாக நகரப் பாடசாலைகளில் நியமிக்க வேண்டும் என்று கல்வி ராஜாங்க அமைச்சரும் வன்னிப் பிரிவு பாராளுமன்ற உறுப்பினருமான ராஜமனோகரி புலேந்திரன் அறிவித்துள்ளார் என்று நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

இதன் காரணமாக நகரப் பகுதி பாடசாலைகளுக்கு இடமாற்றம்பெற விரும்பும் ஆசிரியர்கள் உடன் நியமனம் செய்யப்படுகின்றனர்.

கல்வி ராஜாங்க அமைச்சர் வவுனியா கல்வித்திணைக்களத்திற்கு அறிவித்ததைத் தொடர்ந்தே இந்த நியமனம் வழங்கப்படுகிறது.

வவுனியா நகரப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் பலரும் கிராமப்புற ஆசிரியர்கள் சிலரும் நகரப்பகுதி பாடசாலைகளில் தம்மை நியமிக்கும்படி வேண்டி நின்றனர். இவர்களின் கோரிக்கையை அடுத்தே இந்த நியமனம் வழங்கப்படுகிறது.

தற்போது நகரப் பாடசாலைகளில் தேவைக்கு அதிகமான ஆசிரியர்கள் குவிக்கப் பட்டுள்ளனர். கிராமப்புறப் பாடசாலைகளில் ஆசிரியர்பற்றாக்குறை நிலவுகிறது.

கல்வி ராஜாங்க அமைச்சரின் அறிவிப்பை அடுத்து கிராமப்புறப் பாடசாலைகளுக்கு போதிய ஆசிரியர்களை நியமனம் செய்ய முடியாத நிலையில் வவுனியா கல்வித் திணைக்களம் திண்டாடுகிறது. இதனால் கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

தவிர, கிராமப்புறப் பாடசாலைகளுக்கு தளபாடங்கள் அனுப்பி வைப்பதும் உபகரணங்கள் அனுப்பி வைப்பதும் நிறுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய இராணுவ நடவடிக்கையினால் பத்துக்கு மேற்பட்ட கிராமப் பாடசாலைகள் சேதமடைந்துள்ளன.

கல்வி அமைச்சோ வவுனியா கல்வித்திணைக்களமோ கிராமப்புற மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் எதுவித முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதே சமயம் சில சலுகைகளைப் பெறும் நோக்குடன் சமுதாயப் பொறுப்புணர்ச்சி அற்ற நிலையில் சில ஆசிரியர்கள் செயல்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [தி]

## இருமிநாசினிகளுக்குத் தடை விவசாயிகள் அவதி

(வவுனியா)

சில குறிப்பிட்ட கிருமிநாசினி வகைகள் விவசாயிகள் கொண்டு செல்வதற்கு இராணுவம் தடைவிதித்த காரணத்தினால் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இதனால் வடபகுதி விவசாயிகளினால் பயிர்களுக்குத் தொற்றும் சில நோய்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலை நிலவுகிறது.

தடை செய்யப்பட்ட கிருமிநாசினி வகைகளில் விஷம் கூடிய மொனோகுரோட்ட போஸ் என்ற கிருமிநாசினி குறிப்பிடத் தக்கது. (தி

## பொலிஸ் அதிகாரி மீது மானபங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஓர் பெண்ணை மானபங்கப் படுத்தினார் என்ற குற்றச் சாட்டிற்கு உள்ளாக்கப் பட்டிருக்கும் தென்னிலங்கை உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் ஒருவரின் நடவடிக்கைகள் பற்றிய விசாரணைகள் முடுக்கிவிடப் பட்டுள்ளது.

காலியைச் சேர்ந்த பொலிஸ் நிலையமொன்றின் பொறுப்பதிகாரியாக இருந்த இவர் திருமணமான இளம் ஆசிரியர் ஒருவரை மானபங்கப்படுத்தினார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஆசிரியையோடு தொடர்பு கொண்டிருந்த இவர் ஆசிரியை விவாகரத்துப் பெற்றுக்கொண்டால் திருமணம் செய்வதாகக் கூறி கெடுத்தாராம். விவாகரத்துப் பெற்றுக்கொண்ட ஆசிரியை கணவனும் இல்லை. காக்கிச் சட்டை அதிகாரியும் இல்லை என்ற நிலையில் அந்தரிக்கின்றாராம். (பா)

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ். இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

இடம்: குமாரசாமி மண்டபம்
திகதி: 1992 . 06 . 28 (ஞாயிறு)

நிகழ்ச்சிநிரல்;

| | | |
|---|---|---|
| காலை | 8.30 - 9.00 | ஞானவைரவ சுவாமி வழிபாடு |
| ,, | 9.00 - 10.00 | ஆயுட்கால அங்கத்துவ அட்டை விநியோகம் |
| ,, | 10.00 - 10.30 | தேநீர் |
| ,, | 10 30 - 12.30 | கூட்டம் |
| மாலை | 12.30 - 1.30 | மதிய உணவு |
| ,, | 1.30 4 30 | மென்பந்து துடுப்பாட்டம் |
| ,, | 4 30 — | அதிபரின் தேநீர் விருந்து |

### மாவட்ட பயிற்சித்திட்டம்

(புங்குடுதீவு)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையினால் நடாத்தப்படும் யாழ் மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்விக்கான

## தியகல்ல நீர்வீழ்ச்சியில் பிள்ளைகளை வீசியவர் கைது

(ஹற்றன்)

தியகல்ல நீர்வீழ்ச்சியில் தனது இரண்டு பிள்ளைகளையும் வீசியதாகச் சொல்லப்படும் ஒருவரை ஹற்றன் பொலிசார் கைது செய்துள்ளனர்.

ஹற்றன் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள்கள் இருவர் மேற்படி நபரைக் கைது செய்தனர்.

இச்சம்பவம்பற்றி ஹற்றன் பொலிஸ் தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்,
ஜயபுரம், பல்லவராயன்கட்டு,

### கொள்வனவு உத்தியோகத்தர் பயிற்சியாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி ப.நோ.கூ. சங்கத்திற்கு கொள்வனவு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பூநகரி ப.நோ.கூ. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.
2. கூட்டுறவு பணியாளரின் 11-வது சம்பளத்தில் இரண்டு வருட கால அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 12-வது சம்பளத்தில் 4 வருடத்துக்கு குறையாத அனுபவமும் மேற்பார்வையாளர் மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் கடமையாற்றிய அனுபவம் உடையவராக இருத்தல்.
3. அல்லது, கல்வித்தராதரம் க.பொ.த. உயர்தரம் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும் / கூட்டுறவு பயிற்சி உயர்தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது க.பொ.த (சாதாரணதரம்) 6 பாடங்களில் அதாவது எண் கணிதம் / வர்த்தகம் தமிழ் உட்பட 4 பாடங்கள் திறமைச்சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனம் ஒன்றில் 4 வருடங்களுக்கு குறையாத கொள்வனவு விற்பனை களஞ்சிய நடவடிக்கையில் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
4. ஆங்கிலம் / சிங்களம் சரளமாக பேசக்கூடியவராகவும், வாசிக்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
5. வயது 18 க்கும் - 40 க்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்
6. சம்பள அளவுத்திட்டம் - 855 - 30 7 40 8 - 1385 ஏனையபடிகளும்.
7. வெளி இடங்களுக்கான படிச்செலவு சுற்று நிருபத்திற்கு அமையவும், காலத்திற்கு காலம் நெறியாளர் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமையவும் வழங்கப்படும்.

மேற்படி விண்ணப்பங்களுடன் கீழ்வரும் சான்றிதழ்களும் இணைக்கப்பட்டு 30 06 92 க்கு முன் பொது முகாமையாளர், பூநகரி ப.நோ.கூ.சங்கம், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு என்ற விலாசத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

1 கல்விச்சான்றிதழ் 2 வதிவிடச்சான்றிதழ்
3. பிறப்புச்சான்றிதழ் 4 நற்சான்றிதழ்
5 நிறுவனத்தில் கடமையாற்றியிருப்பின் அது சம்மந்தமான அனுபவச் சான்றிதழ்
என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இப்படிக்கு,
கூட்டுறவு சேவையிலுள்ள,
ஒப்பம்: ந. பாலசுப்பிரமணியம்
பொது முகாமையாளர்.

குறிப்பு முன் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை என்பதை அறியத் தருகின்றோம். (சி/4581)

30-05-1992

## 45-ம் நாள் நினைவஞ்சலி

புங்குடுதீவு நயினாதீவு கிராமிய வங்கி

## ஒய்வூதிய கொடுப்பனவுகள் இன்று வழங்கப்படும்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்குரிய ஜூன் மாத கொடுப்பனவுகள் 19-ம்திகதி வெள்ளிக்கிழமை யாழ். அடைக்கல மாதா கோவிலுக்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கிக்கு வந்து சேர்ந்துள்ளதாகவும் இவற்றிற்கான கொடுப்பனவுகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் வழங்கப்படும் என்றும் இ கிராமிய வங்கி முகாமையாளர் திரு. து. வசந்தகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார். (22)

## நினைவு கூருகின்றோம்...
## 1992-06-22

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் ஒட்டகப்புலத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**முருகேசு** [வேலுப்பிள்ளை சிறிமுருகதாஸ் - ஒட்டகப்புலம், வசாவிளான்]

1987 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய

★ **கீர்த்தி** [சாமித்தம்பி புவிராஜகீர்த்தி - தம்பிலுவில், அம்பாறை]

சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய

**இராகவன்** [சுப்பிரமணியம் தியாகராசா - கோப்பாவெளி, மட்டக்களப்பு]

மட்டக்களப்பு/ வாழைச்சேனை, கறுவாக்கேணைப்பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் சுற்றிவளைத்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

**தீசன்** [வேலு மதிவாணன் - பெரியபுல்லுமலை, மட்டக்களப்பு)

1989 ஆம் ஆண்டு அம்பாறை அக்கரைப்பற்றுப்பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**பாரூக்** (நாகூர்த்தம்பி பாயீஸ் - அக்கரைப்பற்று - 01 அம்பாறை]

திருக்கோணமலை/தென்னமரவடி, சிறிபுரம் பகுதியில் சிறிலங்காப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**பிரகாஸ்** (கணபதிப்பிள்ளை கமலநாதன் - திருக்கோணமலை]

1990-ம் ஆண்டு திருக்கோணமலை / உப்புவெளி, 3 ஆம் கட்டைப்பகுதியில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**வேங்கை** (ஆறுமுகம் மயில்வாகனம் - அம்பாள்குளம்)

**டானியல்** (கனிபா முகமது ராசிக் - திருக்கோணமலை)

திருக்கோணமலை நிலாவெளிப்பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எம்மைப்பிரிந்த

**சிறி** (புல்மோட்டை திருக்கோணமலை]

மன்னார், தலைமன்னார்ப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**சசிதரன்** (அல்போன்ஸ் - குஞ்சுக்குளம், மன்னார்)

யாழ் மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்விச்கான மாவட்ட மட்டயிற் சித்திட்டம் 24 06-92 புதன் கிழமை காலை 9 30 மணி தொடக்கம் மணிக்கூட்டு வீதியில் உள்ள மேற்படி சபை மண்டபத்தில் செல்வி கு.குமாசாமி தலைமையில் நடைபெறும். (22)

## விளை.போட்டிக்கு பதிவு செய்யவும்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக் கழகத்தில் வரும் சனிக்கிழமை 27 ஆம் திகதி நடைபெற இருக்கும் 35மைல் துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டியிலும், யூலை 4 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பத்து மைல் மரதன் ஓட்டப் போட்டியிலும், கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் தமது பெயர் விபரங்களை அவ்வவ் பீட விளையாட்டுத் துறை தலைவர்களிடம் பதிவு செய்யுமாறு விளையாட்டுத் துறை தலைவர் கேட்டுள்ளார். பதிவு செய்யும் இறுதித் தினம் இன்றாகும்.

## சமூகமேம்பாட்டுக் கழகம்

[கொழும்புத்துறை]

யாழ். தேசிய வீடமைப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன் சமூகமேம்பாட்டுக் கழகம் அமைக்கப்படவுள்ளது யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள், மகளிர் கிராம அபிவிருத்திச்சங்கங்கள் ஆலய பரிபாலனசபையினர், பாடசாலை அபிவிருத்திச்சபையினர் போன்ற சகல பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை ஒன்றிணைத்துச் சகல வட்டாரங்கள் தோறும் இது அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் வட்டாரரீதியில் இக்கழகம் அமைக்கும் முயற்சியில் தேசிய வீடமைப்புத் திணைக்களத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். (24)

,, 4 30 — அதிபரின் தேநீர் விருந்து

உறுப்பினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்- இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம்

சுந்தரம் டிவகலாலா
செயலர்

(சி/4583)

## இலங்கை செஞ் சிலுவைச் சங்கம், யாழ்கிளை, தலைமையகம்

## ஆரம்ப சுகாதார கவனிப்பு உத்தியோகத்தர்

மேற்படி பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வித் தகைமை, சுகாதாரப் போதனாசிரியர் அனுபவம், ஆற்றல், ஆர்வம், சேவை செய்யும் மனப்பான்மை உள்ளோர் 02 - 07 - 1992 க்கு முன் விண்ணப்பிக்கவும். 04 - 07 - 1992 காலை 10. 00 மணிக்கு நேர் முகப்பரீட்சை பணிமனையில் நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
19 - 06 - 1992
[ சி/ 4582 ]

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4.00 6.00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகிறது

புதிய வெளியீடு

## EAGLE HAS LANDED

(கழுகு தரையிறங்கி விட்டது)

[4569]

## 45-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
1975 - 07 - 14

வீரமரணம்
1992 - 05 - 09

## 2-ம்லெப். மாவி (கண்ணன்)

### (நாகலிங்கம் பகீரதன்)

தென்றலாய் உருவெடுத்த நீ,
அமைதி காக்க வந்த
அக்கிரமகாரரின் அக்கிரமத்தால்
சீறும்வரிப் புலியானாயடா.
சிங்களப் படையின் சிறுமை கண்டு
புயலாகிப் போனாயடா
தமிழீழ வானில் சுதந்திரகானம்
மீட்டிய உன் பிஞ்சுவிரல்கள்
இன்று ஓய்ந்ததேனோ ?
நேற்று வரை,
எம் முற்றத்தை முத்தமிட்ட
பட்டுப் பாதங்கள்
இன்று மறைந்த தேனோ ?

அன்று,
பால் வடியும் பிஞ்சுவயதினிலே
புலிகள் நாமத்தை நெஞ்சிலே
தீயினால் பொறித்துக் கொண்டாய்.

இன்று,
பால் மணம் மாற முன்பே
தமிழீழ மக்கள் எல்லாம்
நெஞ்சிலே உனைப்பூஜிக்கிறார்கள்.

விடுதலைப் புலியாக வீதியிலே நீ நடக்க
விண் மீன்கள் வியந்து நிற்குமடா !
மாவீரனாகி விட்ட மாவியே,
என்றும் எம் இதயத்தில் உன்
எழில் முகம் தான் தோன்றுதடா !

- குடும்பத்தினர்,
நண்பர்கள்.

மீசாலை தெற்கு. [2699]

வீரச்சாவெய்திய

சசிதரன். (அல்போன்ஸ் - குஞ்சுக்குளம், மன்னார்)

மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

2-ம்லெப். நாதன் (சி ரவீந்திரன் கிராஞ்சி, பூநகரி, மன்னார்]

அம்பாறை, காரைதீவுப்பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 35 தமிழர்கள்

மற்றும் இதே பகுதியில் வெட்டிக்கொல்லப்பட்டு கிணற்றில் போடப்பட்ட 4 தமிழர்கள்.

மட்டக்களப்பு நிந்தாவூர்ப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக்கொல்லப்பட்ட 23 தமிழர்கள்

சம்மாந்துறைப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட 30 தமிழர்கள்,

கறுவாக்கேணிப்பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

வாழைச்சேனை அகதிமுகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டு படுகொலைசெய்யப்பட்ட குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள் உட்பட 71 தமிழர்கள்

சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட வரிசைச்சேனை கண்ணகிபுரத்தைச் சேர்ந்த மாணவன்

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலைசெய்யப்பட்ட பெரியநீலாவணை-1ஐ சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

திருக்கோணமலை / மூதூர், கடற்கரைச்சேனைப்பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ச் சிறுவன்.

பலாலி முகாம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட குட்டியபுலத்தைச் சேர்ந்த தமிழ்ப்பெண்

பலாலி வடக்கில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட கொம்மாந்துறை உமா ஆலை வீதியைச் சேர்ந்த தமிழ் இளைஞன்

## ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4580)

நல்லூர் ... யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

சொல்லுக்கு ஒப்ப செயலையும்,
செயலுக்கு ஒப்ப சொல்லையும்,
இணங்கச் செய்யவேண்டும்.
— வில்லியம் ஷேக்ஸ்பியர்.


# ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 55


## தமிழ்க் குழுக்களின் அங்கலாய்ப்பு

"சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கும் எட்டு தமிழ்க் குழுக்களுக்கும் இடையே கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பு கேலிக்கும், நகைச்சுவைக்குமுரியது." இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த 15 ஆம் திகதி ஜனாதிபதி பிரேமதாச வுடனான சந்திப்பு தமக்கு திருப்தி அளிக்கவில்லையென கொழும்பில் பேச்சு நடத்திய தமிழ்க் குழுவினர் தெரிவித்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

திரு. குமார் பொன்னம்பலமும் ஏனைய தமிழ்க் குழுவினரும் வெளியிட்டுள்ள கருத்துக்கள் அவர்கள் இதுவரை சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேம தாசாமீது கொண்டிருந்த நம்பிக்கையையும், அது தற்பொழுது சிதறடிக்கப்பட்டதையுமே காட்டுகின்றது. குறைந்த பட்சம் இந்தியா - சிறிலங்கா ஒப்பந்தத்தினால், தற்பொழுது இணைக்கப்பட்ட நிலையில் இருப்பதாகக் கூறப்படும் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பையாவது சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அங்கீகரிப்பார் எனக் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் எதிர்பார்த்தன ஆனால், வடக்கு - கிழக்கு தொடர்பாக ஐ. தே. கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டதற்கு அப்பால் ஒரு அடி தானும் செல்லமுடியாது என திரு பிரேமதாசா கூறியதும் தமிழ்க்குழுக்களுக்கு தலையில் இடி விழுந்ததுபோல் ஆகிவிட்டது. இதுவரையும் திரு பிரேமதாசா மீது நம்பிக்கைவைத்து புலிகளை ஓரங்கட்டி, வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஓர் ஆட்சி அமைப்பை நிறுவ அவர் உதவுவார் என நம்பியிருந்த இக்குழுக்களுக்கு திரு. பிரேமதாசாவின் அறிவிப்பு அவரின் உண்மைச் சொரூபத்தைக் காட்டியது.

1977 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்றவையுடன் நடந்த பாராளுமன்ற கூட்டத்தில் புதிய பிரதமராக தெரிந்தெடுக்கப்பட்டிருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா தமிழ் எம்பிக்களைப் பார்த்து "போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" எனத் தெரிவித்தார், இதே போன்றே 1983 இல் இனக்கலவரம் உச்சக் கட்டத்தில் இருந்த போது திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தனா "நான் சிங்கள மக்களின், தலைவனாகவே இருக்க விரும்புகிறேன்" என்றார் இவ்வாறாக திரு.ஜே ஆர் ஜெயவர்த்தனா போன்று திரு பிரேமதாசா வெளிப்படையாக தமிழருக்கு எதிராக பேசவில்லை ஆகியும் இனவாதத்தில் திரு.ஜே ஆர். ஜெய

# லிபியா இன்னல் அடையப் போவதில்லை

# மேற்கு நாட்டவரே இன்னல் அடைவர்

ரம்ழான் மாதத்தில் பெரு முயற்சியின் பின் 'காமா' பத்திரிகையின் நிருபரான பியரே லாபொஸ்ற்ரைச் சந்திக்க லிபியா அதிபர் கேணல் கதாபி சம்மதம் தெரிவித்தார். இச் சந்திப்பின் போது கேணல் கதாபி வழங்கிய பேட்டியில் ஒரு பகுதி.

கேள்வி:

அண்மைக் காலங்களில் லிபியாவைப்பற்றிய உலக எண்ணம் உங்களை சஞ்சலத்தில் ஆழ்த்தியுள்ளதா?

பதில்:

இல்லை தவறான கருத்துக்களை கூறும் நாடுகள் தான் தங்கள் கூற்றையிட்டு கவலைப் படநேரிடும். லிபியா அல்ல. பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் பல நாடுகளின் நூற்றுக்கணக்கான நிறுவனங்கள் எங்கள் மண்ணில் தற்பொழுது இயங்கிவருகின்றன. எங்களை மனவருத்தத்தில் ஆழ்த்தி மன நிறைவடைந்த அந்நாடுகளிலிருந்து வந்துள்ள சுமார் இரண்டு மில்லியன் தொழிலாளர்கள் தான் இன்னல்படப் போகின்றார்கள் இதனால் இந்நாடுகள் சடுதியாகப் பல பில்லியன் டாலர்கள் கணக்கிலான வருமானங்களை இழக்க நேரிடும் வேறு நாடுகளின் ஒத்துழைப்புடன் லிபியா இம்முதலீடுகளைச் செய்யும்

எங்களிடம் திட்டங்களுக்குக் குறைவில்லை. சில திட்டங்கள் நடைமுறைப் படுத்தப் பட்டு வருகின்றன. வேறுசில திட்டங்களும் வகுக்கப்படுகின்றன தற்பொழுது எங்களுக்குத் தீங்கு ஏற்படும் வகையில் நடந்துகொள்ள பவர்களை நாம் விரும்பமாட்டோம். எங்கள் நாட்டுக்கு எதிராகத் தடைகளை விதித்தால் அவைகளை நாம் வரவேற்போம். அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டால் அது எங்கள் மக்கள் மனதில் உத்வேகத்தைப் புகுத்தி எங்கள் நாட்டை எங்களது சொந்தக் காலிலேயே நிற்க வகைசெய்யும். எங்களுக்குத் தேவையான வளங்கள் எங்களிடமுண்டு (எங்களுக்கு எதிரான தடை நடவடிக்கைகளில் பிரான்சும், இங்கிலாந்தும் இறங்கினால் அவர்கள் தங்கள் நாட்டையே பாதிப்புக்குள்ளாக்குவர்கள் எனப் பலமாக நான் நம்புகின்றேன்

அமெரிக்கா மறைமுகமாகத் தனது புதிய எதிரிகளுக்கு எதிராகச் செயற்படும் தனது நலன்கள் பாதிக்கப்படும்எனத் தெரியவரும்போது அமெரிக்கா தனது பழைய நண்பர்களைக் கைவிடவிரும்புவதுடன் புதிய கவர்ச்சிகரமான நண்பர்களைத் தேடுவதையும் நீங்கள் பொருட்படுத்தாமல் இருக்க முடியாது.

குவைத்திலும் இது தான் நடைபெற்றது. இந்தக்குவைத் நாட்டைக் கட்டியெழுப்பத் தங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமென்ற வாக்குறுதியின் பேரில் பிரான்சும் இங்கிலாந்தும் மற்றைய நாடுகளும் வளைகுடாப் போரில் பங்குகொண்டன. ஆனால் உண்மையில் நடந்தது என்ன? அந்நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகக் கோருவிலை கோரும்போது அமெரிக்க நிறுவனங்களின் கோருவிலை பெருமளவில் ஏற்கப்பட்டது. பிரான்சும், இங்கிலாந்தும் தங்களின் இறந்த வீரர்களைக் கௌரவிப்பதோடு மாத்திரம் நிற்கவேண்டி நேரிட்டது.

கேள்வி:

அதற்கு பின்?

பதில்:

அதன் பின் நாம் உண்மை நிலையைஉற்று நோக்குவோம். பிரான்சும் இங்கிலாந்தும் அராபியர்களின் சீற்றத்துக்கு ஆளாகியுள்ளன. இதனிடையே அமெரிக்க நிறுவனங்கள் பில்லியன் கணக்கில் வருமானத்தைச் சேகரிக்கின்றன. இதுதான் இங்கு நடக்கும் விளையாட்டாகும். உண்மையில் ஐரோப்பிய நாடுகளின் செல்வாக்கை அரேபிய நாடுகளில் இல்லாதொழிக்க அமெரிக்கா கனவுகாண்கின்றது பிரான்சின் கொள்கைகள் தற்கொலைக்கு ஒப்பானவை. இதைப் பிரஞ்சு மக்கள் ஏற்றுக்கொள்வது தான் எனக்கு விளங்காதிருக்கின்றது

கேள்வி:

இவைகளுக்குரிய தீர்வுகள் என்ன?

பதில்:

இப்போதைக்கு அமெரிக்காவின் வெள்ளை மாளிகையினால் கொடுக்கப்படும் கட்டளைக்கிணங்க பிரான்சும் நடந்துவருகின்றது. பிரஞ்சு மக்களைப் பற்றிய அக்கறை அமெரிக்காவுக்கு இடையாது. பிரஞ்சுக்காரர்கள் தங்கள் நாட்டின் நலன்களில் அக்கறை காட்டுவதில்லை என்பதை இலகுவில் நிரூபிக்க முடியும்.

எங்களுடான தனது தற்போதைய கொள்கைகளில் பிரான்சு மாற்றங்களைக் கொண்டு வந்தால், அவர்களுடனான எங்களது உறவைச் சீர்செய்யமுடியும் அரசியல் ரீதியாக எங்களுக்குத் தீங்கு விளைவிக்கும் நாட்டுக்கு, அந்த நாட்டிற்குப் பணம் தேவை என்பதற்காக நாம் உதவவேண்டும் என்ற கேள்விக்கே இடமில்லை. அவர்கள் அரசியல் ரீதியாக எங்களுக்குத் தீங்கான போக்கைக் கடைப்பிடித்து வருகின்ற போதிலும் இதுவரைக்கும் பிரான்சும், இங்கிலாந்து மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளுடன் நாங்கள் மென்மையான போக்கையே கடைப்பிடித்துவருகின்றோம். அவர்களுடைய நிறுவனங்கள் எங்கள் மண்ணில் இயங்கி வருகின்றன ஆனால் இது தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கமாட்டாது. அரசியலும், வர்த்தகமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கின்றன. யார் எங்களது கொள்கைக்கு ஆதரவு நல்குகிறார்களோ அவர்களுக்கு நாம் அள்ளிக்கொடுப்போம். அத்தோடு எங்களது நோக்கத்திற்கு தீங்கிழைப்பவர்களிடமிருந்து எதுவும் வாங்கவோம் என்ற கேள்விக்கே இடமில்லை என்பதையும் நான் கூறிவைக்க விரும்புகின்றேன். இந்த நடைமுறை நீடித்தால் லிபியாவின் சந்தைகள் அனைத்தும் மூடப்படும். எங்களுக்கெதிரான நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்குத் தடைவிதிப்போம்.

முழு உலகத்துக்கும் நான் விடுக்கும் எச்சரிக்கை இதுவாகும். லிபியாவின் பெயரில் நான் சுதந்திரமாக இந்த முடிவுகளை எடுக்கக்கூடிய நிலையிலுள்ளேன்.

கேள்வி:-

இங்கிலாந்து?

பதில்:-

இதைப்பற்றிக் கலந்துரையாடுவதில் பிரயோசனமில்லை. கன்சர்வேற்றிவ் கட்சியினருக்கு அவர்களது கொள்கைகளும் பிரித்தானியாவை மண்ணாக்கியதோடல்லாமல் தொழிலாளர்களை இன்னல்களுக்குள்ளாக்கி ஆங்கிலேய மக்களை நாடுசுற்றிகளாக்கியுள்ளன. இனவெறியர்களும், சுயநலச் சர்வாதிகாரிகளும், மற்றவர்களை விடத் தாங்கள் மேம்பட்டவர்கள் என்ற கொள்கையுடையவர்களும் தான் இன்று இங்கிலாந்தின் ஆட்சிபீடத்தில் இருப்பவர்களாகும். இங்கிலாந்து அரேபிய முசுலிமுகளை வெறுக்கின்றது அந்நாடு தனக்கேதீங்கு விளைவிக்கின்றது. ஆனால் அந்நாடு உன்னதநாகரீகத்தைக்கொண்டது. திரு. யோன்மேயரை நான் குறிப்பிடவில்லை.

கேள்வி:-

'மாகிரெப்' (Maghreb) என அழைக்கப்படும் வடமேற்கு ஆபிரிக்காவின் ஐந்து நாடுகளினதும் (லிபியா, ரியூனிசியா, அல்ஜீரியா, மொரொக்கோ, மொறிட்டனியா) மேற்குமத்தியதரைப் பிரதேசத்திலுள்ள ஐந்து நாடுகளினதும்(இத்தாலி பிரான்சு, ஸ்பெயின், போர்த்துக்கல், மோல்டா) ஒன்றிணைப்பிற்கான உச்சி மாநாடு அல்ஜீரியாவில் தற்போது நிகழ்ந்துவரும் நிகழ்ச்சிகளால் பின் போடப்பட்டது. இந்த உச்சிமாநாட்டை 5+5 எனக் கூறுவர். இந்தக் கூட்டத்தைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?

பதில்:-

பிரஞ்சு அரசாங்கம் கடைப்பிடித்த கொள்கையினால் இந்த முயற்சி முறிவுற்றது. பான் - அமெரிக்கா (Pan Am) வானூர்தி விவகாரத்தில் பிரான்சும் இங்கிலாந்தும் அமெரிக்காவின் கொள்கைகளைப் பின்பற்றுகின்றன.

கேள்வி.

இந்த மாநாடு பிற்போடப்பட்டது. உங்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியதா?

பதில்:

ஆம் செருப்பால் அடித்த மாதிரி இருந்தது. ஏனைய மாகிரெப் நாடுகளுக்கும் அப்படியே இருந்தது. பிரான்சு பாரதூரமாக அந்நாடுகளை அவமதித்தது தற்பொழுது எங்கள் உடல்களுக்கு மேலாக நடந்துகொண்டு அந்நாடுகளுடன் ஒத்துழைக்க முனைகின்றது. அராபிய மக்கள் தங்களை அரவணைத்து மண்டியிடவேண்டுமெனப் பிரான்சு நினைக்கின்றது. அராபியர்களுக்குஉணர்ச்சியில்லை அவர்கள் அறிவிலிகள், தங்கள் விடயங்களில் பகுப்பாய்வு செய்ய முடியாதவர்கள் என நினைக்கின்றது. இது பாரதூரமான தவறாகும். இந்த மாகிரெப் கூட்டமைப்பில் இருக்கும் ஏனைய நாடுகள் லிபியாவுடன் சேர்ந்து ஒத்துழைப்பதற்கு உந்தும் காரணிகள் வேறுபலவுண்டு.

கேள்வி;

இந்த ஆண்டு நடைபெறவிருக்கும் அமெரிக்க சனாதிபதி தேர்தல் உலக அரசியலில் பாதிப்பை ஏற்படுத்துமா?

பதில்

நிச்சயமாக அமெரிக்கத்தேர்தல்கள் உலக விவகாரங்களில் நச்சுத்தன்மையை ஏற்படுத்துகின்றன. குடியரசுக்கட்சியின் முழுமனதான ஆதரவு திரு. புஷ் அவர்களுக்கு கிடையாது அவர்களில் மூன்றிலொரு பகுதியினர் இவரின் கொள்கைகளுக்கு ஆதரவளிப்பதில்லை இததேர்தல் அவருக்குச் சுலபமாக இருக்காதென உள்நாட்டு அரசியல் விற்பன்னர்கள் எண்ணுகின்றனர். ஆனால் அவருடைய கோட்பாடுகை ஆலோசகர்கள் வலதுசாரித் தேசியவாதிகளின் ஒரு பகுதியினரின் ஆதரவைப் பெறத் தேவையான வாதங்களை அள்ளி வீசுவார்கள்.

அவர் ஈராக்கிய சனாதிபதிக்கெதிரான புதிய நடவடிக்கையொன்றைத் தொடங்குவார் அல்லது எனது அரசாங்கத்தைப் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும், போர்த்திறனாற்றல்ரீதியாகவும் அடக்க எத்தணிப்பார் என எனது ஆலோசகர்கள் தெரிவித்துள்ளனர்.

தேர்தலில் வெற்றிபெறுவதற்காக எதையும் செய்யலாம். இவைகள் மக்களது உரிமைகளுக்கும் சுதந்திரத்துக்கும் கூடத்தீங்கு விளைவிக்கலாம். [தொடரும்]

மதாசா வெளிப்படையாக தமிழருக்கு எதிராக பேச வில்லை ஆகியும் இனவாதத்தில் திரு.ஜே ஆர். ஜெயவர்வதனாவைவிட திரு. பிரேமதாசா சற்றும் குறைந்தவரல்ல, பௌத்த பேரினவாதத்திற்கு எதிரானவரும் அல்ல சில வேளைகளில் முன்னையவர்களை விட தீவிரமானவரானவர் என்றே சொல்ல வேண்டும்.

திரு.பிரேமதாசா தேர்தலில் வெற்றியீட்டிய பின்னர் தனது பதவி ஏற்பு வைபவத்தை கண்டி தலதா மாளிகை எண் கோண மண்டபத்தில் நிகழ்த்தினார். திரு. பிரேமதாசாவிற்கு சமூகத்தில் இருந்த சில சமூக சிக்கலைப் போக்குவதற்காக இவ் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பினும் தலதா மாளிகையில் பதவி ஏற்பு வைபவம் நடத்தப்பட்டதில் இருந்து பௌத்த பேரினவாதத்தின் தலைவனாகவும் காவலனாகவும் பிரேமதாசா தன்னைக்காட்ட முற்பட்டதை மறுத்து விடமுடியாது. அத்தோடு, பௌத்த சாசன அமைச்சையும் திரு. பிரேமதாசாவே நேரடியாகக் கவனித்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், பௌத்தத்தின் மகிமையை பொது மேடைகளில் பேசுவதும், பௌத்த விகாரைகளுக்குச் செல்வதும் அவரது தினசரி நடவடிக்கையாகும். அத்தோடு, பழைய விகாரைகளைப் புனருத்தாரணம் செய்வதிலும், புதிய சிலைகளை நிறுவுவதிலும் கடந்த கால அரசியல் தலைவர்களை விட திரு பிரேமதாசா தீவிர அக்கறை காட்டி வருகின்றார். திரு. பிரேமதாசாவின் பௌத்தத்தின் மீதான இவ் அக்கறை, உண்மையானதா, போலியானதா என்பதை விட அவர் பௌத்த பேரினவாதத்திற்கு தலைமை தாங்க முற்பட்டுள்ளார் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

இது மாத்திரமின்றி, திரு. பிரேமதாசா தனது ஆட்சிக்காலத்தில், தமிழரின் இனப் பிரச்சினை தீர்வதற்காக எந்தவித முன்னேற்றகரமான நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளவில்லை. மாறாக, தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டுள்ளதோடு, இனப்படுகொலையையும் ஊக்கிவித்தும் வருகின்றார். இவரது ஆட்சிக் காலத்தில், சிறிலங்கா ஆயுதப்படை பல்கிப் பெருகியுள்ளது பெருமளவு ஆயுத தளபாடத்தையும் வாங்கிக்குவித்துமுள்ளது அததோடு இதுவரை மேற்கொள்ளப்படாத அளவிற்கு கடந்த இரண்டுவருடத்தில் இனப்படுகொலைகளும் இடம் பெற்றன.

ஆனால், திரு. பிரேமதாசா பெரும்பாலும், சமாதானத்தைப் பற்றியே பேசினார். யுத்தத்தை வெறுப்பது போல் பிரகடனங்கள் செய்தார். பௌத்தரின் போதனைகளை சொரிந்தார்- தமிழரின் பிரச்சினையை தீர்க்க பதவி விலகவும் தயார் எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில், கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்கள் திரு. பிரேமதாசாவின் பேச்சை நம்பின. சொல்லுக்கும் செயலுக்கும் இடையிலுள்ள இடைவெளியைக் காணதவறின அதிகார ஆசையில் தமிழ் தேசிய இனத்தைக் காட்டிக் கொடுத்தன. பௌத்த பேரினவாதம் இவர்களை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டது. இனப்படுகொலைக்கு இவர்களையே கருவியாக்கியும் கொண்டது.

# சோமாலியாவில் பஞ்சம்; 5000 சிறுவர்கள் உயிரிழப்பு

(நைரோபி)

சோமாலியாவில் பஞ்சத்தினால் தினமும் ஐயாயிரம் சிறுவர் சிறுமியர் இறக்கின்றனர் என்று ஐ நாவின் விசேட பிரதிநிதி ஜனாப் முஹம்மது சாஹ்னூன் தெரிவித்துள்ளார்.

நைரோபியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார் தொடர்ந்து பேசிய அவர்;

சோமாலியாவில் குழுக்களிடையே சண்டை நிலவுகிறது, இதனால் பஞ்சம் நிலவுவதாகவும், சோமாலியாவில் இன்று நிலவுவது போன்ற பஞ்சத்தை நான் கண்டதே இல்லை என்றும் தெரிவித்தார்.

சோமாலியாவில் நிர்வாகம் இல்லை மின்சாரம் இல்லை. சுகாதார வசதியில்லை ஒரு சில டாக்டர்கள் மட்டுமே உள்ளனர் போஷாக்கின்மை நோய் காரணமாகவே தினமும் ஐயாயிரம் சிறுவர் சிறுமியர் இறக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதித்தேர்தலில் ஜனதாதள் வேட்பாளர்

(டில்லி)

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் ஜனதாதள் வேட்பாளராக போட்டியிட பேராசிரியர் ஜி. ஜி. வெல்ஸ்ஸிற்கு தேசிய முன்னணி ஆதரவு தெரிவித்துள்ளது

தேசிய முன்னணியின் தலைவர் என். டி. ராமராவ் இது குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இடது சாரிக் கட்சிகளின் பரிசீலனைக்கு இந்த ஆலோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் கூட்டப்பட்ட தேசிய முன்னணியின் உயர்மட்டக் கூட்டத்திற்குப்பின்னரே என். டி. ராமராவ் இதனைத்தெரிவித்தார்.

# ஊட்டியில் மண்சரிவு; ஆறுபேர் புதையுண்டனர்

(சென்னை)

ஊட்டிக்கு அருகே நேற்று முன்தினம் இடம்பெற்ற மண் சரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் உயிருடன் புதையுண்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்குப் பருவமழை இந்த மலைப்பகுதியில் ஆரம்பித்துள்ளதால், பலத்தமழை பெய்து மண் சரிவு ஏற்பட்டதாகவும், உதக மண்டலம் அருகே உள்ள பாஞ்சூரில் பலத்த மழை காரணமாக பாடசாலைக் கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# காஷ்மீர் பிரச்சினைத்தீர்விற்கு புதிய அணுகுமுறைநடவடிக்கை

## -எஸ், பி. சவான் தகவல்

[டில்லி]

காஷ்மீர் பிரச்சினைக்கு புதிய அரசியல் தீர்வொன்றினைக் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கவிருப்பதாக இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்துள்ள பேட்டியொன்றிலேயே சவான் இதனைத் தெரிவித்தார். இப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு நாம் அணுகும்முறை முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும் என்றும்,

காஷ்மீர் மாநிலத்திலுள்ள அதிகாரிகளின் ஒத்துழைப்பின்றி எதுவும் செய்ய முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து காஷ்மீர் டில்லியின் நேரடி ஆட்சியின் கீழ் இருந்து வருகிறது. கவர்னர் ஒருவரும் இரு சிரேஷ்ட ஆலோசகர்களும் காஷ்மீரில்நிர்வாகத்தை நடத்தி வருகின்றனர். காஷ்மீர் தீவிர வாதிகளின் போராட்டத்துக்கு அனுதாபமுள்ள அதிகாரிகள் அரசாங்கத்தின் இரகசியங்களை தீவிரவாதக்குழுக்களுக்கு அறிவித்து வரும் அபாயம் இருந்து வருகிறது. ஒரு சிலரின் இந்த நடவடிக்கைகளுக்காக முழு அதிகாரிகளையும் நாங்கள் கண்டிக்க முடியாது எனவும் சவான் கூறினார்.

ஆகவே காஷ்மீர் மாநிலத்திலுள்ள காஷ்மீர் அதிகாரிகளின் நம்பிக்கையைப்பெற வேண்டுமானால் நாங்கள் அவர்கள் மீது நம்பிக்கையை வைத்திருக்க வேண்டும்.

மாநில நிர்வாகம் மக்களுடன் தொடர்பு வைத்திருக்கவில்லை கவர்னரைத் தவிர வேறு அதிகாரிகள் எவரும் சாதாரண மக்களை சந்திப்பதில்லை அவர்களின் கஷ்டங்களை புரிந்து கொள்வதில்லை. அரசியல்வாதிகள் மீண்டும் செயற்பட காஷ்மீரில் தளம் அமைக்கப்படவேண்டும் என்றும் சவான் சொன்னார்.

இதே நேரம் தமது அரசு மேற்கொள்ளவிருக்கும் புதிய திட்டம் பற்றிய விபரங்களை அவர் வெளியிட மறுத்து விட்டார்.

# குடிசைகள் தீக்கிரை

(சென்னை)

திருச்சிராப்பள்ளிமாவட்டம் லால்குடி அருகே மணற்காடு என்ற கிராமத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தீ விபத்தில் இருநூறுக்கும் மேற்பட்ட குடிசைகள் தீக்கிரையாகியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தீ விபத்தினால் ஏழு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அவசரகால நிலைச்சட்டம் மீண்டும் பிறப்பிக்கப்படும்

## தென்ஆபிரிக்க ஜனாதிபதிடி.கிளார்க்

(ஜொகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் 1990 ஆம் ஆண்டு அகற்றப்பட்ட அவசரகால நிலையை மீண்டும் பிறப்பிக்கப்போவதாக தென்னாபிரிக்க ஜனாதிபதி டி.கிளார்க்தெரிவித்துள்ளார்.

ஜொகனஸ்பேர்க்கில் செய்தியாளர்கள் மாநாட்டில் இதனை அவர் தெரிவித்தார்.

முன்னதாக இந்த வார முற்பகுதியில் இனச்சண்டைகளினால் 39 பேர் கொல்லப்பட்ட முகாமிற்கு கிளார்க் சென்றபோது ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக் காரர்கள் இவரது பயணத்தை ரத்துச் செய்யும்படி வற்புறுத்தினார்கள். இதன் பின்னர் அவர் செய்தியாளர்கள் மத்தியில் இதனைத் தெரிவித்தார்

மேலும் அவர் தெரிவிக்கையில்,

நகரில் நிகழும் வன்செயல்களை கடுமையான சட்ட நடவடிக்கைகள் மூலமே தடுத்து நிறுத்த முடியும் என்றும்

தென்னாபிரிக்காவில் அராஜகம் ஏற்படுவதைத் தடுக்க கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது பற்றி பரிசீலிக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஈழநாதம்

# வடக்கு-கிழக்கு யுத்தத்தை தொடர முடியாது

**--சந்திரா பண்டார**

(கொழும்பு)

இரு நாடுகளுக்கிடையிலான யுத்தம் போல வடக்கு, கிழக்கில் யுத்தத்தை தொடர்ச்சியாக நடத்த முடியாது என எரிசக்தி மின்சக்தி அமைச்சர் சந்திரா பண்டார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அவசர கால நிலைமையை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யார் அரசாங்க பதவிக்கு வந்தாலும் இனப்பிரச்சினைக்கு சாதாரணதீர்வு காணப்பட வேண்டியது அவசியம். தேர்தலுக்காக இப்பிரச்சினையை கொண்டு அரசியல் இலாபம் தேடுவதில் கடந்த காலம்செயற்பட்டுவந்தோம். இவ்வாறான தேர்தல் இலாப நடவடிக்கையை இனியும் நாம் செய்யக் கூடாது. பொதுப்பிரச்சினையான இந்த தேசிய பிரச்சினைக்கு நாம் ஒன்றிணைந்துசெயல்பட முன்வரவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துப் பேசினார்.

## இடம்பெயர்ந்த தீவக மக்கள்

# நலன்காக்கும் கழகத்தின் சிறுவர்பராமரிப்பு நிலையம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன்காக்கும் கழகத்தினால் அநாதைச் சிறுவர் இல்லம் ஒன்று திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அநாதையாகத் திக்கற்று துன்ப நிலையில் உள்ள சிறுவர்களின் துன்பநிலையை அறிந்து அவர்களின் எதிர்கால வாழ்வை ஒளிமயமானதாக மாற்ற என மேற்படி கழகம் அநாதைச் சிறுவர் இல்லம் ஒன்றை அமைத்து பராமரிப்பது என்கின்ற தீர்மானம் கழகக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மேலும் தீவகப் பாடசாலைகளில் நடனம், சித்திரம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளதால் மாணவர்களின் நன்மை கருதி இவ்விடங்களிற்கு ஆசிரியர்களை நியமிக்குமாறு வேலணை, யாழ். கல்விக்கோட்ட கல்வி அதிகாரிகளைக் கேட்டல் எனும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. (பா)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சாரணர்சேவை சேவைவாரம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றுக்கு சகல நல்லூர் திரிசாரணர்களையும் தலைவர் அ. அசோக்குமார் அவர்களையும் நாளை செவ்வாய் (23.6 92) பி ப.4.00 மணிக்கு அகதிகளுக்கான ஐ நா. உயர்ஸ்தானிகராலயத்தில் சந்திக்குமாறு உதவித் திரிசாரண தலைவர் எஸ்.பத்மராஜா அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார். (05

# விலைவாசி உயர்வால் மக்கள் பட்டினியால் அவதி

## சுதந்திரக்கட்சி எம். பி.

(கொழும்பு)

"பாவனை பொருள்களின் விலைகள் கண்டபடி உயருகின்றன. பட்டினியால் வாடுகின்றார்கள் தற்போது அரசு எரிமலை மேல் உள்ளது" என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. ஸி. வி. குணரத்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில், பாவனையாளர் பாதுகாப்பு சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டின் மீது பேசிய குணரத்ன நாட்டில்இன்று போஷாக்கு கிடைக்கவே கிடையாது என்றும்,

பனடோல் வில்லையின் விலை பத்து சதத்தால் கூடியுள்ளது. ஒருகிலோ லக்ஸ்

இன்று பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தை ஒரு சதத்திற்குகூட யாரும் பொருட்படுத்தவில்லை. பொருள்களின் விலை நினைத்தபடி உயர்த்தப்படுகின்றன. இந்நிலை நீடித்தால் மக்களால் வாழமுடியாமல் போகும். என்றும் தனதுரையில் அவர் குறிப்பிட்டார்.

## 29ஆம் திகதி பரிசீலிக்கப்படும்

பாராளுமன்ற தெரிவுக்குழுவினால் கட்சிகளிடம் சமர்ப்பிக்கப்பட்ட புதியதிட்டமும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸினாலும் ஏழு தமிழ்க் கட்சிகளினாலும் கையளிக்கப்பட்ட அறிக்கையும் எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# 27 நாடுகளைச் சேர்ந்தோர் விசா இன்றிவர அனுமதி

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் மேலும் 27 நாடுகளைச் சேர்ந்தவர்களை விசா இன்றி நாட்

அடைந்த நாடுகளும் ஆகும்.

இப்பொழுது அனுமதிக்கப்பட்ட நாடுகளில் ஜேர்ஜியா தவிர்ந்த சோவியத்தின் ...

## வருடாந்த நவ நாள்

(குருநகர்)

நவாலி தெற்கு சப்பேதுறு பாவிலு தேவாலய வருடாந்த நவநாள் கொண்டாட்டங்கள் இம்மாதம் 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தினமும் மாலை 4-30 மணிக்கு செபமாலை, ஆராதனை, மறையுரை, திருப்பலி என்பன நடைபெறும்.

28ஆம் திகதி மாலை 4-00 மணிக்கு நற்கருணை ஆராதனை திருப்பலி நடைபெறும்.

29ஆம் திகதி காலை 7-00 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம்பெறும். (21)

## ஜோர்ஜியா, மொல்டோவா

# கலவரங்கள் தொடர்ந்தால் தலையிடவேண்டி வரும்

**-ரஷ்யா எச்சரிக்கை**

(மொஸ்கோ)

முன்னாள் சோவியத் குடியரசுகளான ஜோர்ஜியா மொல்டோவா ஆகியவற்றில் இடம்பெறும் இனக்கலவரங்களை கட்டுப்படுத்த ரஷ்யா தலையிடும் என ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜோர்ஜியாவிலும் மொல்டோவாவிலும் இனக்கலவரங்கள் பெருமளவில் நடைபெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அந்த இரு குடியரசுகளிலும் நடுநிலைப் படைகளாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள படைகள் நடுநிலை கொள்கையை கைவிட்டு அரசுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டுமென கிளர்ச்சியாளர் விரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது

சண்டை தீவிரமடைந்தால் ரஷ்யா அதில் தலையிட்டு இரத்தக்களரியைத் தடுக்கும் என ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் எச்சரிக்கை விடுத்துள்ளார் சண்டையை நிறுத்தும் வல்லமை ரஷ்யாவிடம் உண்டு என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மொல்டோவாவில் தளமிட்டிருக்கும் முன்னாள் சோவியத் படைகள் அங்குள்ள கிளர்ச்சியாளருக்கு உதவி வருவதாக ஏற்கனவே குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டுள்ளன. இதே போல ஜோர்ஜியாவில் கலவரங்களை கட்டுப்படுத்தாவிட்டால் மனித உரிமைகளை பாதுகாக்க ரஷ்யா தலையிடும் என பொரிஸ் யெல்சின் தெரிவிக்கிறார்.

# தொழுநோய் சிகிச்சைக்கு புதிய மருந்து கண்டுபிடிப்பு

**-உலக சுகாதார ஸ்தாபனம்**

(நியுயோர்க்)

தொழுநோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் புதியமருந்து வகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

இவ் வியாதி1940 இல் 'டப்சோன்' என்னும் மருந்து கண்டுபிடிக்கும் வரைகுணமாக்கமுடியாததாகவே இருந்து வந்தது.

இதனால் பாதிக்கப்பட்டவர்களில் 3வீதத்தினர்மட்டுமே அந்நேரத்தில் உயிர் பிழைக்க முடிந்தது புதிய மருந்து பாவனைக்கு வந்ததும் மரண வீதம் குறைந்தது 1974 ல் மீண்டும் ஆராய்ச்சியின் மூலம் 'டப்சோன்' மருந்தைதப்புதிய இரசாயனங்களுடன் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட 1991 முதல் மரணவீதம் குறைந்து வருகிறது.

தற்போது இந்நோயை முற்றாக குணமாக்கக்கூடிய வகையில் மருந்துகள் கண்டுபிடிக்கக்கூடிய வகையில் மருந்துகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது (05)

# கலிபோர்ணியாவை மூன்றாக பிரிக்க யோசனை

(சக்ரமண்டோ)

அமெரிக்காவின் சனத்தொகை மிக்க கலிபோர்ணியாவை மூன்றாக பிரிக்க வேண்டும் என மாநில சட்டசபை உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

எட்டுப் பிராந்தியங்களையும், ஒரு கோடியே எழுபது லட்சம் மக்களையும் கொண்ட தென் கலிபோர்ணியா, இருபத்திரண்டு பிராந்தியங்களையும் ஒரு கோடி மக்களையும் கொண்ட மத்திய கலிபோர்ணியா இருபத்தியெட்டு பிராந்தியங்களையும் முப்பது லட்சம் மக்களையும் கொண்ட வடக்கு கலிபோர்ணியா என்றே மூன்று பிரிவாக பிரிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில சட்டசபை இது சம்பந்தமாக ஆராய விசேட கமிட்டி ஒன்றை அமைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அரசியல் நிபுணர்கள் பிரிவினை யோசனையை ஆதரிக்கவில்லை அமெரிக்காவிற்கு 51ஆவது. 52ஆவது மாகாணங்கள் இப்போது அவசரம் இல்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# திரிப்போலியில் விபத்து; 9பேர் பலி,143 பேர்காயம்

லிபியாவின் தலைநகர் திரிப்போலிக்கு தென்மேற்கே இருபத்தியொரு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள அரச வெடிமருந்துக் கிடங்கொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர் என்றும்,143 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதிகள் அமைக்கவும், கல் உடைக்கவும் தேவையான வெடிமருந்துகள் வைக்கப்பட்டிருந்த இந்தக் கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தில் திரிப்போலி நகரத்தின் கட்டடங்கள் சேதமுற்றன என்றும், வெடிப்புக்கள் தொடர்ந்து ஒரு மணி நேரம் நீடித்ததாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இந்தியப் பிரதமர் ஜப்பான் பயணம்

(டில்லி)

இந்திய பிரதமர் பி.வி நரசிம்மராவ் இன்று ஜப்பான் செல்ல இருக்கிறார் ஐந்து நாட்கள் மேற்கொள்ளப்படும் இந்தவிஜயத்தின் போது இவர் ஜப்பானிய தொழில் அதிபர்களைச் சந்தித்து பேசவுள்ளார்.

ஜப்பானிய சக்கரவர்த்தியையும், பிரதமரையும் இந்திய பிரதமர் சந்திக்க உள்ள போதிலும் இவற்றைவிட தொழில் அதிபர்களைச்சந்தித்து அவர்களை இந்தியாவில் முதலீடு செய்யவைப்பதே இந்த விஜயத்தின் முக்கிய நோக்கம் என தெரிவிக்கப்படுகிறது.

## விமானம் வெடித்து 10 பேர் பலி

அமெரிக்க அரசின் விமானமொன்று அரசேனாவில் வெடித்து வீழ்ந்ததில் விமானத்தில்சென்ற 10 பேர் கொல்லப்பட்டனர்.

விமானம் என்ன காரணத்தினால் வெடித்தது என்பது மர்மமாகவே உள்ளதாகவும் அது பற்றிய தீவிரவிசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் அமெரிக்க புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## இஸ்ரேலில் நாளை பொதுத்தேர்தல்

(டெல் அவிவ்)

இஸ்ரேலில் நாளை பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது.

தற்போதைய பிரதமர் சமீரின் கூட்டமைப்பிற்கும் தொழிற்கட்சித் தலைவர் எட்வர்ட் ரபீர் தலைமையிலான குழுவுக்கும் இடையே கடும்போட்டி நிலவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய கிழக்கு சமாதானப் பேச்சு வார்த்தைகளில் இஸ்ரேலின் சார்பில் யார் பங்கு

# உயர்தர வகுப்பு அனுமதி புதிய நடைமுறை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சித்தி பெற்றிருக்காவிட்டால் ...

திறமைச்சித்திபெற விட்டால் ...

விலை பத்து சதத்தால் கூடியுள்ளது. ஒருகிலோ லக்ஸ்பிறேயின் விலை 120 ரூபாய் இதனால் பிள்ளைகளுக்கு போசாக்கு இல்லை பிறக்கும் குழந்தைகளும் நிறைகுறைவாகவே உள்ளன மக்கள் பட்டினியால் தவிக்கிறார்கள். நியாயவிலை ஆணைக்குழுவின் கீழ் 43 பொருள்கள் இருந்தன. இப்போது மூன்றே மூன்று பொருள்கள்தான் நியாயவிலையின்கீழ் உள்ளன. அவை மருந்துகள், மாவு, பாண் ஆகியனவே என்றும்,

மேலும் 27 நாடுகளைச் சேர்ந்தவர்களை விசா இன்றி நாட்டுக்குள் வர அனுமதி அளித்துள்ளது உல்லாசப் பிரயாணிகளின் வருகையை அதிகரிப்பதற்காகவே இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 39 நாடுகளைச் சேர்ந்தவர்கள் சிறிலங்காவிற்குள் விசா இன்றி வர அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந் நாடுகளில் அநேகமானவை ஐரோப்பிய நாடுகளும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஜெர்ஜியா தவிர்ந்த சோவியத்தின் ஏனைய குடியரசுகள் அடங்கியுள்ளன.

## மாணவர் உணவு முத்திரை விநியோகம்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்களுக்கான கார்த்திகை 1991 மாதத்துக்குரிய உணவு முத்திரை விநியோகம் தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச்சங்க மாவிட்டபுரத்திலுள்ள புதிய நிவாரண கிளையில் விநியோகம் செய்யப்படுகின்றது.

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (சா) தரத்திலிருந்து ஆகக்குறைந்த பெறுபேறுகளுடன் உயர்தரத்திற்கு அனுமதி வழங்கும் நடைமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இம் மாற்றங்களின்படி க.பொ.த (சா) பரீட்சையில் மூன்று பாடங்களில் திறமைச் சித்தியும், மூன்றுபாடங்களில் சாதாரண சித்தியும் பெற்றவர்கள் க.பொ.த உயர்தரத்திற்கு அனுமதிக்கப்படுவர். ஆனால் இவர்கள் தமிழ் அல்லது கணிதத்தில் திறமைச் சித்தி பெறாதுவிட்டால் அடுத்த பரீட்சையில் கோட்டாயம் திறமைச்சித்தியை பெறவேண்டும்.

மூன்று திறமைச்சித்திகளும் இரண்டு சாதாரண சித்திகளும் பெற்று உயர்தரத்திற்கு அனுமதிக்கப்படுபவர்கள் மறுமுறை பரீட்சையில் வேறு ஒரு பாடத்தில் சித்தியடைதல் வேண்டும். அத்துடன் அவர்கள் தமிழ் அல்லது கணிதத்தில் திறமைச்சித்தி பெறாவிட்டால் அப்பாடங்களிலும் திறமைச் சித்தி பெறவேண்டும்.

மேற்கூறப்பட்டவாறு சித்திகளைப் பெறத் தவறுபவர் தொடர்ந்து கல்வி கற்க அனுமதிக்கப்படமாட்டார்.

இந்நடைமுறை கல்விக் கோட்டங்களுக்கூடாக அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (பா)

...ரேலின் சார்பில் யார் பங்கு பற்றுவார் என்பதையும் இத்தேர்தல் நிர்ணயிக்க உள்ளது.

## ஆய்வுநிறுவனப் பணிகளில்

# மக்களை இணைத்து ஒத்துழைப்பு வழங்குக

"நீங்கள் ஒவ்வொருவரும் மக்களை இணைத்து தமிழீழ ஆய்வு நிறுவனப் பணிகளில் கூடுதல் ஒத்துழைப்புச்செய்ய வேண்டும்".

இவ்வாறு நெல்லியடி நாவலர்மடம் பாடசாலையில் வடமராட்சி பிரதேச ஆய்வு நிறுவன உற்பத்திக்குழு உறுப்பினர்கள்மத்தியில் கடந்த சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்ற கலந்துரையாடலில் வடமராட்சிப் பிரதேச ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் திரு. பூங்குன்றன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உங்களுக்குத் தரப்பட்ட பணிகள் உங்கள் சொந்தப் பணிகளாகக் கருதி மக்களுக்கும், ஆய்வு நிறுவனத்திற்கும் இடையில் ஒரு இணைப்புப் பாலமாக இருந்து செயற்பட்டு மக்களை சிறுதானியச் செய்கைகளில் கூடுதல் ஊக்கமளிக்க வைத்து ஆய்வு நிறுவனத்தில் நம்பிக்கை ஒளியை ஏற்படுத்த வேண்டும்.

நீங்கள் மக்கள் மத்தியில் தவறுகளை ஏற்படுத்தினால் அது ஆய்வு நிறுவனத்தின் வளர்ச்சியைப் பெருமளவு பாதிக்கும். இந்நிறுவனம்மூலம் வழங்கப்படும் தண்ணீர் இயந்திரத்தை உங்கள் பொருளாகப் பாவித்து மற்றவர்களும் பயனடையக் கூடிய வகையில் பராமரிக்கவேண்டும்.

ஊற்றுநிறுவனம்மூலம்வழங்கப்படுகின்ற விதை, சிறுதானியங்கள், எரிபொருள்களைச் சிலர் பெற்று பின்னர் செய்கை பண்ணாமல் விடுவதையும் அறிய முடிகிறது. ஆகவே சிறுதானியச்செய்கைகளில் ஈடுபடுபவர்களை நீங்கள் இனம் காணுதல் அவசியம் என்றார்.

மற்றும் இது சம்பந்தமாக பலர் கலந்துரைகள் வழங்கினர். உற்பத்திக் கிராமப்பகுதி பிரச்சினைகளும் அறிந்து ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. (82)

# அரசின் செலவீடுகள் சிறு பிள்ளைத்தனமானது

## -- வல்பொலராகுலதேரோ

(கொழும்பு)

புத்தளயில் நடைபெறும் கிராம எழுச்சி கண்காட்சிக்கு இரண்டரை லட்சம் ரூபாவிற்கு மேலாக மின்சாரம், பாதுகாப்பு, போக்குவரத்து என்பவற்றிற்கு செலவிடப்படுகிறது நாடு இன்றிருக்கும் நிலையில் இவ்வாறான விழாக்கள் சிறுபிள்ளைத்தனமானவை என விகாராதிபதி வல்பொலராகுலதேரோ தெரிவித்துள்ளார்.

இவ்வாறான செயல்கள் சிறிலங்கா ஜனாதிபதியின் சுய பிரசாரத்துக்கே பயன்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முதலாம் ஆண்டு

...வும் ஆலோசிக்கப்படுகிறது என்றும்,

பாடசாலையில் ஏற்கனவே யுள்ள மாணவரின் உறவினருக்கு வழங்கப்படும் 25சதவீத இடத்தை பத்துசதவீதத்தால் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## விரைவாக

...ரைம்ஸ்'' பத்திரிகைகளுக்கு இவர் அளித்துள்ள பேட்டியிலேயே இதனைத் தெரிவித்ததாக கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஐ.நா. தீர்மானத்திற்கு ஈராக் கண்டனம்

(பாக்தாத்)

ஈராக்கின் எல்லையிலுள்ள ஆறு எண்ணெய் கிணறுகளையும் ஈராக்கின் உன்ஹ சர் துறைமுக நகரின் சிலபகுதிகளையும் குவைத்துக்கு அளித்து ஐக்கியநாடுகள் பாதுகாப்புசபை புதிய எல்லையை நிர்ணயம் செய்திருப்பது கண்ணி வெடிவைப்பதுபோன்ற செயலென்றும் அது எப்பொழுதும் வெடிக்கலாம் என ஈராக் எச்சரிக்கை செய்துள்ளது.

பாதுகாப்பு சபையின் எல்லைவரையறை அமைதியையும் பிராந்திய ஸ்திரத் தன்மையை ஒருபோதும் கொண்டுவராதென்றும் அவர் தெரிவித்தார். இத்தகைய முடிவு அமெரிக்காவின் மேம்போக்கான தன்மையையே காட்டுகிறது. வரலாறு புவியியல் தெரியாத பின்னணியில் எடுக்கப்பட்ட முடிவு இது என ஈராக் தெரிவித்துள்ளது.

# செ. அன்ரனீஸ் அணி இறுதி ஆட்டத்தில் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டுக் குழுவினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இறுதி ஆட்டத்தில், பாஷையூர் சென். அன்ரனீஸ் கழகம் வெற்றியீட்டியது. சென். அன்ரனீஸ் கழகம் 2—0 என்ற ரீதியில் தம்மை எதிர்த்து விளையாடிய குருநகர் பாடும் மீன் கழகத்தை தோற்கடித்தது.

நேற்றுமாலை சென். பற்றீஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்த விளையாட்டுப் போட்டி ஆரம்பம் முதல் இறுதிவரை விறுவிறுப்பாக இருந்தது.

## நியமனம்

இனப்பிரச்சினை தீர்வுக்கென ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்றஉறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவினால் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளது.

ஓராண்டு காலத்திற்குள் பிரச்சினைக்கான தீர்வொன்றை கண்டறியுமாறு இக்குழுபணிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்

...பட்டுள்ளது. ஆனால் தமிழ்ப் பாடசாலைகளில் மாணவர்கள் அடிப்படைவசதி ஏதும் இன்றி ஓலைக் கொட்டில்களில் கல்விகற்று வருகின்றனர் தமிழ் மாணவர்களுக்கு கல்வி போதிப்பதற்கு போதிய எண்ணிக்கையிலான ஆசிரியர்கள் இல்லை. தமிழ்ப்பாடசாலைகள் அடிக்கடி இராணுவ சுற்றிவளைப்பிற்கு உள்ளாகின்றன. பாடசாலைகளினுள் வைத்தும் வெளியே வைத்தும் தமிழ் மாணவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். பல பாடசாலைகளில் இருந்து தமிழ் மாணவர்கள் துரத்தப்படுகின்றனர். பின்னர் அப்பாடசாலைகள் இராணுவத்தினரின் முகாம்கள் ஆக்கப்படுகின்றன.

தமிழ்ப் பாடசாலைகள் இந்நிலைக்கு உள்ளாகி இருக்கும் போது முஸ்லிம் பாடசாலைகள் சிறிலங்கா அரசினால் தரமுயர்த்தப்படும் நவீனமயப்படுத்தப்பட்டும் வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## வாகன இலக்கங்கள்

## 21-06-1992

எமது பதிவின் கடைசி இலக்கம்:- 4492

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

24-5474 26-3138 26-5517. 24-7044. 42-5603. 24-2681 28-4435, 26-6062, 22-267. 26-3518. 27-5197, 24-5092, 70-7643 26-4057, 40-1188, 27-4239 26-1495, 28-1085 40-9188, 28-1111, 24-9549, 26-1989, 27-9779, 24-4908, 42-9220.

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

28-4255 27-5775. 28-1992. 42-2157 42-6452, 42-3726. 27-2089. 27-3927 41-9211. 27-9489. 26-2972. 28-1062 27-1255 24-7375. 25-514. 36-4438, 25-1664 37-3969 71-2047. 70-4018.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது